அசல்

(6.12.15) நா. கிருஷ்ணமூர்த்தி.

அசல் – 1 நகல் – இல்லை.

சிதம்பரம்.
6.-12.15.

உ

சிவமயம்.

வானுறையுந் திங்களது மருவுதனை கலைக்கேற்ப மகிழ்ந்து நாளு
மீனுறையுங் கடற்புவியை வெண்ணிலா வளிக்குதவி விளைந்தல் போலத்
தேனுறையுந் தமிழ்நூல்கள் ததற்கிணையாகவாறு திருத்தி யாண்டுங்
கானுறையுங் கடிமலரோனெனப் புகல மிளிர்வித்த காட்சியோனே!

சாலமுயர் சென்னைதனிற் றமிழ்ப்புலமை நடாத்திவரு தலைவரேறே
வாலறிவி. கனகசினர் நன் றுதவவரு பெயர்தனக்கே வாய்ப்பக் கொண்டோய்!
மூலமறு பான்றில்லைப் பனவனேன் பேர்க்கிருஷ்ண மூர்த்தியென்னே
சீலமுற நினதடிகள் இரக்கணியாந் திகழ்வித்தச் செய்பல் கேண்மோ.

சேயவனே வைலர்தங் கழகம் புக்குச்
செந்தமிழ்நூற் றேர்ச்சியினை யெய்தக் கற்றுத்
தாயனையாய் வருகின்றேன் றமிழ்க்கா லேறாய்த்
திகைபெறுமிவ் வேலையிலிங் கவர்கள் செய்யுந்
தாயபொரு ளுதவியினாற் றொடங்கினேன் யான்
சொன்னவதி லொருவருடப் படிப்புமாயிற்
றயவரு வருடமதில் வேண்டி நாங்க
ளனைவருமைப்பக் கேட்டியருண் மூர்த்தி யானே.

அசல்

(6.12.15) நா. கிருஷ்ணமூர்த்தி.

அசல் – 1 நகல் – இல்லை.

10 P. 380–383. கி. கி. Vol 2
6–12–1915 Copied
page ..

உ.

சிந்தா மணியுஞ் சிலப்பதி காரமுஞ் செப்புபுறம்
நந்தாத நானூறு மெய்ப்பத்துப் பாட்டுட னைமிய
ஆய்ந்தாய் புறப்பொருண் மூன்றும்வெண் பாமணி மேகலையு
நந்தம் பதிப்பி லைமேன எங்கட்கு நாட்டினையே.

சொன்ன இவற்றினுட் பத்துப்பாட் டென்றுந் துகளறுநூல்
முன்னாம் பிசேன வாங்குப்பெற் றேனெழி முதருனைத்
தின்னங் தனித்தமிழ் தாங்களோர் தின்னருட் டன்னையென்றுந்
துன்ன விரும்பின னென்றும் போதுநலந் தாமணியே.

அநேக நமஸ்காரம்.

ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் சைவப்பிரகாசவித்தியாசாலையி அவர்களாற் றமைப்பெறும் உபகாரத்தை ஆதாரமாகக்கொண்டு தமிழ் பயின்றுவருகின்றேன். இப்பொழுது காலேஜாயினையின் நியமிக்கப்பட்ட பாடபுத்தகங்களை வாங்கும் வகையில் சுவாமிகளாற் செய்யப்படும் உதவியை அன்போடும் வணக்கத்தோடும் எதிர்பார்க்கின்றேன்.

அரிய உத்தரவுப்படி நடந்துகொள்ளும்
தாழ்மையுள்ள
நா. கிருஷ்ணமூர்த்தி.

சாத்தப்பாடித் தெரு
சிதம்பரம்.